# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2026 சனவரி

## (103) பொருளியல்

அதிகளவான பரீட்சார்த்திகள் அளவு ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டத்தில் இந்த பொருளியல் வினாத்தாளுக்கு விடையளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் சில வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட தரத்திற்கு விடைகளை அளிக்க முடியாமையை காணக்கூடியதாக இருந்தது.

மதிப்பீட்டுப் பணியின்போது பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

## பகுதி A

**வினா இல. 01**

இந்தப் பகுதி பொருளியல் பாட பாடத்திட்டத்தினுள் உள்ள பரந்தளவான விடயங்களை உள்ளடக்கி கட்டமைக்கப்பட்டிருந்தது. ஒரு கட்டாய வினாவாக, அடிப்படைப் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் நோக்கச் சோதனை வினாக்களை இது உள்ளடக்கியிருந்தது.

இல. **1.1** தொடக்கம் **1.10** வரை பத்து பல்தேர்வு வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இல. **1.11** தொடக்கம் **1.12** வரையான வினாக்களில் தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. அதே வேளை இல. **1.13** தொடக்கம் **1.14** வரையான வினாக்களில் தரப்பட்ட ஒவ்வொரு கூற்றும் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** எனக் கேட்கப்பட்டது. இல. **1.15** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை தமது விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு எழுதுமாறு கேட்கப்பட்டிருந்தது.

அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு வெற்றிகரமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பலவீனமான விடைகளை அளித்திருந்தனர். எனவே, அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்களை கீழ்வருமாறு கோடிட்டுக் காட்டலாம்:

**1.1** பல பரீட்சார்த்திகள் நுண்பாகப் பொருளியல் தொடர்பான சரியான கூற்றாக "*இது நுகர்வோர் நடத்தை பற்றி ஆய்வு செய்கிறது*" என்ற மூன்றாவது தெரிவைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர்.

**1.2** பல பரீட்சார்த்திகள் தொழல்முனைவின் உற்பத்திக் காரணிக்கான வெகுமதி "*இலாபம்*" என வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**1.3** பல பரீட்சார்த்திகள் உற்பத்தியாளர் மிகை ரூ. 1,800/- எனச் சரியாகக் கணிப்பிட்டதன் மூலம் வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**1.4** பல பரீட்சார்த்திகளும் தனி விற்பனையாளரைக் கொண்ட சந்தைக் கட்டமைப்பு "*தனியுரிமை*" எனச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர்.

**1.5** பல பரீட்சார்த்திகள் உற்பத்திச் சாத்திய வளையியின் ஓர் எடுகோளாக "*பரிசீலனையின் கீழுள்ள காலப்பகுதியில் கிடைக்கக்கூடிய வளங்களின் அளவு நிலையானது*" என்பதைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர்.

**1.6** பல பரீட்சார்த்திகள் கட்டளைப் பொருளாதாரமொன்றின் பண்பாக அமையாதது நுகர்வோர் இறையாண்மை இருத்தல் என்பதைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர்.

**1.7** பல பரீட்சார்த்திகள் சமபயன் வளையிகள் தொடர்பான இந்த வினாவுக்கு வெற்றிகரமான விடையை அளித்திருக்கவில்லை. இது சமபயன் வளையி தொடர்பாக பரீட்சார்த்திகள் போதிய அறிவைக் கொண்டிருக்காததைதக் காட்டுகிறது.

**1.8** பல பரீட்சார்த்திகள் நிரப்புப் பொருள்களின் விலைகள், நுகர்வோரின் வருமானம், பிரதியீட்டுப் பொருள்களின் விலைகள் என்பன கேள்வியைத் தீர்மானிக்கின்றன என்பதைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர்.

**1.9** பல பரீட்சார்த்திகள் நுகர்வோர் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பின் விளைவாக கேள்வி வளையி வலப்பக்கமாக நகரும் எனச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.10** பல பரீட்சார்த்திகள் 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்தப் பொருளாதார மீளாய்வுக்கு இணங்க, இலங்கையின் தலா வருமானம் 4,516 அமெரிக்க டொலர் என்பதைச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.11** அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சந்தர்ப்பச் செலவு என்பது ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தைத் தெரிவு செய்வதில் தவிர்க்கப்பட்ட அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதி எனச் சரியாக விடையளித்துப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**1.12** பலர் எல்லை உற்பத்தி (MP) வளையியானது சராசரி உற்பத்தி (AP) வளையியை அதன் உயர்ந்தபட்சப் புள்ளியில் இடைவெட்டுகிறது எனச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.13** "*உற்பத்தியின் உகந்த மட்டத்தில், எல்லை வருமானம் எல்லைக் கிரயத்திற்குச் சமனானது*" என்பது சரியான கூற்று என்பதை பல பரீட்சார்த்திகள் சரியாக அடையாளங் கண்டிருந்தனர்.

**1.14** தனியுரிமைப் போட்டியில், குறுங்கால ஓட்டத்தில் நிறுவனங்கள் சாதாரண இலாபங்களை மாத்திரம் ஈட்டுகின்றன என்பது தவறான கூற்று என அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.15** அதிகளவான பரீட்சார்த்திகள் பொருளாதாரப் பொருள்களின் இரண்டு பண்புகளை வெற்றிகரமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.16** அதிகளவான பரீட்சார்த்திகள் கேள்வித் தள்ளல் பணவீக்கம் என்பதால் யாது கருதப்படுகிறது எனச் சுருக்கமாகவும் வெற்றிகரமாகவும் விவரிக்கத் தவறியிருந்தனர். இது இந்த எண்ணக்கரு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு போதிய மட்டத்தில் இல்லை என்பதைக் காட்டுகிறது.

**1.17** பணத்திற்கான தேவைக்கான நோக்கங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இவ்வினாவுக்கு கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே தெளிவான புரிதலுடன் விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொழிற்பாடுகளுடனான பணத்தின் தேவைக்கான நோக்கங்கள் மற்றும் பணத்தின் பண்புகள் பற்றி குழம்பியிருந்தனர்.

**1.18** மொத்தப் பயன் மற்றும் எல்லைப் பயன் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு பற்றிய பரீட்சார்த்திகளின் புரிதல் குறைந்த மட்டத்தில் இருந்ததை அவர்களது விடைகள் உணர்த்தியிருந்தன. சில பரீட்சார்த்திகள் அதற்குப் பதிலாக மொத்த உற்பத்தி மற்றும் எல்லை உற்பத்தி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விவரித்திருந்தனர்.

**1.19** மனித அபிவிருத்தியின் பரிமாணம் பற்றிய மாணவர்களின் அறிவு போதியதாக இருக்கவில்லை என்பது அவர்களுடைய விடைகளிலிருந்து தெளிவாகியது.

**1.20** சில பரீட்சார்த்திகள் இலங்கையின் பொருளாதாரத்தில் காணப்படும் அண்மைய பொருளாதாரப் போக்குகள் பற்றிய வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்த அதே வேளை ஏனையோர் அதற்குப் பதிலாக பேரினப் பொருளாதார இலக்குகள் பற்றி எழுதியிருந்தனர்.

## <u>பகுதி B</u>

இப்பகுதியானது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைத் தாங்கிய நான்கு (04) கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது.

### வினா இல. 02

**(a)** **(i)** பல பரீட்சார்த்திகள் நான்கு உற்பத்திக் காரணிகள் பற்றிக் கேட்கப்பட்ட வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**(ii)** பல பரீட்சார்த்திகள் சந்தர்ப்பச் செலவு பூச்சியமாகவுள்ள சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்ட வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**(b)** தரப்பட்ட கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகளைப் ($Qd = 200 - 10p$ and $Qs = 40 + 30p$) பயன்படுத்தி, பெரும்பாலான பரீட்சார்த்திகள் சந்தைச் சமநிலை விலை மற்றும் கணியத்தைச் சரியாகக் கணிப்பிட்டு, முழுப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(c)** பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்கவில்லை. இங்கு நிரம்பலின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிப்பவை பற்றிக் கேட்கப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் வினா பற்றிய புரிதலின்றி, நிரம்பலைத் தீர்மானிப்பவைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். அதே வேளை ஏனையோர் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிப்பவை பற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.

### வினா இல. 03

**(a)** அரசாங்கத்தால் பண்டமொன்றுக்கு அலகு வரி ஒன்றை விதிப்பதால் ஏற்படும் விளைவுகளை வரைபொன்றைப் பயன்படுத்தி ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாக விவரித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் நிரம்பல் வளையியைச் சரியாக வரையும்போது அதை இடப்பக்கமாக நகர்த்துவதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கேள்வி வளையியைச் சரியாக முன்வைக்கவில்லை. நிரம்பல் வளையியைத் துல்லியமாக வரையத் தவறியதன் காரணமாக, பரீட்சார்த்திகள் இதற்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

**(b)** நீண்டகால உற்பத்திச் செயன்முறை பற்றிய அதிகளவான பரீட்சார்த்திகளின் புரிதல் போதியதாக இல்லை என்பதை அவதானிக்க முடிந்தது. உற்பத்திச் செயன்முறையிலுள்ள நீண்டகால ஓட்டத்தின் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்த போதிலும், பல பரீட்சார்த்திகள் ஒரேயொரு பண்பை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர்.

**(c)** சிலருரிமைச் சந்தையொன்றின் பண்புகளை ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். பல பரீட்சார்த்திகள் இதனை நிறை போட்டி மற்றும் தனியுரிமை போன்றவற்றின் பண்புகளுடன் சேர்த்துக் குழப்பியிருந்தனர். ஒட்டுமொத்தத்தில், கணிசமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்கத் தவறியிருந்தனர்.

## வினா இல. 04

**(a)** பல பரீட்சார்த்திகள் வர்த்தக வங்கியொன்றின் தொழிற்பாடுகளைச் சரியாகக் குறிப்பிட்டிருந்த அதே வேளை, சில பரீட்சார்த்திகள் இதற்குப் பதிலாக மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை எழுதியிருந்தனர்.

**(b)** பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்ததை அவதானிக்க முடிந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் *''விலை மட்டத்தை''* விவரித்திருந்தனர் எனினும், அவர்கள் விலை மட்டத்திற்கும் வட்டிக்கும் இடையிலான தொடர்பை விவரிக்கத் தவறியிருந்தனர்.

**(c)** தர ரீதியான பணக் கொள்கை கருவிகள் பற்றிய போதிய புரிதல் இன்மையால், பல பரீட்சார்த்திகள் அதற்குப் பதிலாக மத்திய வங்கி வட்டி வீதங்கள், நியதிச்சட்ட ஒதுக்க விகிதம் மற்றும் திறந்த சந்தைச் செயற்பாடுகள் போன்றவற்றை விவரித்திருந்தனர்.

## வினா இல. 05

**(a)** பல பரீட்சார்த்திகள் சந்தர்ப்பச் செலவைச் சரியாகக் கணிப்பிட்டு, குறைந்த சந்தர்ப்பச் செலவைக் கொண்ட நாடு ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை அடையாளங் கண்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சந்தர்ப்பச் செலவைக் கணிப்பிட்டிருந்தனராயினும், ஒப்பீட்டு நயத்தைக் கொண்ட நாடுகளின் பெயர்களை மாற்றி எழுதியிருந்தனர் அல்லது கணிப்பீடுகளில் தவறு விட்டிருந்தனர்.

**(b)** நெகிழ்ச்சியான மற்றும் நிலையான பரிமாற்ற வீதங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகக் குறைந்த மட்டத்தில் இருந்ததை அவதானிக்க முடிந்தது. பல பரீட்சார்த்திகள் பொருளியல் சார்ந்த வரைவிலக்கணங்களுக்குப் பதிலாக *''நெகிழ்ச்சி''* (மாற்றமடைதல்) மற்றும் *''நிலையான''* (மாறாதிருத்தல்) போன்ற இலக்கணம் சார்ந்த பொருள்களை மாத்திரம் வழங்கியிருந்தனர்.

**(c)** அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் தேய்வைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே விவரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் *''ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்'' மற்றும் ''இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்தல்''* போன்ற இரண்டு நடவடிக்கைகளை விவரிக்காது வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 06**

**(A)** பல பரீட்சார்த்திகளால் பேரினப் பொருளாதார நோக்கங்களைச் சரியாகக் குறிப்பிட முடிந்திருந்ததால், முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

**(B)** பல பரீட்சார்த்திகள் தேசிய வருமானக் கணக்கீட்டிற்கான வருமான அணுகுமுறை, செலவின அணுகுமுறை மற்றும் வெளியீட்டு அணுகுமுறை ஆகிய மூன்று அணுகுமுறைகளைக் குறிப்பிட்டதன் மூலம் முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

**(C)** பல பரீட்சார்த்திகள் (a) சந்தை விலையில் மொத்த உள்நாட்டுச் செலவினத்தையும் (GDE), (b) சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் (GDP), (c) சந்தை விலையில் நிகர தேசிய உற்பத்தியையும் (NNP) சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் GDP இற்கு, நிகர வெளிநாட்டு முதன்மை வருமானத்திற்கான சீராக்கத்தைச் செய்யும்போது (+) அல்லது (−) பெறுமானங்களைக் கவனத்திற் கொள்ளத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் அதனைக் கழித்திருந்தனர்.

**(D)** கையளவுப் பரீட்சார்த்திகள் மாத்திரமே ‘‘அடிப்படை விலை’’ பற்றி வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். இதன் மூலம் பரீட்சார்த்திகளிடையே அடிப்படை விலைகள் பற்றிய போதிய அறிவு இல்லை என்பது தெளிவாகிறது.

**(E)** சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே நேர் மற்றும் நேரில் வரிகளுக்கிடையிலான வேறுபாட்டைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பொருளியல் சார்ந்த வரையறைகளுக்குப் பதிலாக, சொற்களின் இலக்கணப் பொருள்களை வழங்கியிருந்தனர். (எ-கா., “நேரடியாக’’ எதிர் ‘‘மறைமுகமாக’’ச் சேகரிக்கப்பட்ட வரிகள்”).

\- - -

**பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள் :**

**(1)** புதிய பாட விடயங்களில் அதிக கவனம் செலுத்தி பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும்.

**(2)** உரிய கவனத்துடன் வினாவை வாசிப்பதுடன், நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும்போது, தேவையற்ற விளக்கங்கள்/ விவரங்களை எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய **"செயல் வினைச்சொல் செவ்வை நிரல்"** வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் புத்தகங்கள், கையேடுகள், பனுவல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயங்கள் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள்.

**(5)** விடையளிக்கும்போது, அடிப்படைக் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காணத் தேவையான ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதுடன், வினா இலக்கங்கள் சரியாகவும் தெளிவாகவும் எழுதப்பட வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்த கால வினாத்தாள்களையும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளையும் கூர்ந்து ஆராய்வது அறிவையும் அனுபவத்தையும் கூர்மையாக்க உதவும்.

**(9)** பொருளியல் எண்ணக்கருக்களின் சரியான புரிதலைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஒவ்வொரு எண்ணக்கருவுக்கும் இடையேயான வேறுபாட்டை ஒப்பீடு செய்வதற்கான ஆற்றல் கிடைக்கப் பெறும்.

**(10)** நேரத்தைச் சரியாக முகாமை செய்வது முக்கியமானதாகும்.

**(11)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன் வினா இலங்கங்களை மீளவும் பரிசோதிக்கவும்.

**(12)** முன்னேற்பாடு மற்றும் பரீட்சையில் வெற்றி பெறுவதற்கான மிகுந்த எதிர்பார்ப்புடன், தன்னம்பிக்கையுடன் பரீட்சைக்குத் தோற்றுங்கள

- * * * -